8th August 1966]

was sanctioned to the Society by the Government besides free services of staff of one Gazetted Officer, one Junior Analytical Chemist and one Manager-Accountant. The equipments required for the refinery have been purchased and installed.

திரு. வை. சங்கரன் : அவர்களிடமிருந்து 14 காரட் தங்கம் கிடைக்குமா ? அப்படியானல் எப்படிப்பட்டவர்களுக்கு அந்தத் தங்கம் வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பழைய நகைகளை வாங்கி அதை முழுத் தங்கமாக மாற்றிப் பின்னல் 14 காரட் தங்கமாக மாற்றுவது. அதுதான் அந்த கோல்ட் ரிபைனரியில் கவனிக்கப்படுவது.

பொற்கொல்லர்கள்

* 194 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொற்கொல்லர்களுக்குத் தொழில் செய்வதற்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களில், முதலில் குறிப்பிட்ட தொழிலை மாற்றிக் கொள்வதற்கு எத்தனை பேர் மனுச் செய்திருக்கிறார்கள், மாவட்ட வாரியாக?

(இ) அவைகளின் மீது எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) A statement[a] is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பொற்கொல்லர்கள் ஒரு தொழிலுக்குக் கடன் பெற்று அதை வேறு வணிகத்திற்கு மாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டால், அவர்கள் பெற்ற கடனைத் திரும்பக் கொடுத்து, பின்னல் மனுச் செய்து அதற்குப் பிறகு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என்று தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானல் அந்தக் கடனைத் திரும்பப் பெறுவது இல்லாமலேயே வேறு ஒரு தொழிலுக்கு மாற்றுவதற்கு வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திரும்பச் செலுத்தாமலேயே வேறு தொழிலுக்கு மாற்றுவதற்கு அனுமதிக்கும் விஷயம் ஆராயப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

பட்டாபிராமன் கமிட்டி அறிக்கை

* 195 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Employees' State Insurance Scheme பற்றிய பட்டாபிராமன் கமிட்டியின் அறிக்கை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுவிட்டதா ?

(இ) ஆமெனின், அதன் நகல் ஒன்று சபை முன் வைக்கப் படுமா ?

[a] Printed as Appendix I on pages 867–875.

[8th August 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) the Employees' State Insurance Scheme Review Committee was set up by the Government of India. The Committee's report has been submitted to them.

(b) Does not arise, in view of answer to clause (a) of the question.

இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகள்

* 196 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளவர்களை நடத்தும் முறைகள் பற்றிய விதிகளையும், அவர்களை விடுதலை செய்யலாமா என்று பரிசிலனை (review) செய்வது பற்றிய விதிகளையும் மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) அது பற்றிய விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) All the persons detained under the Defence of India Rules have since been released from detention; and

(b) Does not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி : பாதுகாப்புச் சட்டப்படி பலர் கைது செய்யப்பட்டுள்ளார்களா ? கறுப்புக்கொடி காண்பிப்பது சட்டத்திற்கு விரோதமானதா ? சட்டப்படி செல்லத்தக்கதா ?

MR. SPEAKER : It is only an opinion. The Hon. Chief Minister need not answer the question.

மது விலக்கு

* 197 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு மே மாதத்தில் கோவை மாவட்டத்தில் பவானி அருகில், போலீஸாரால் சாராயம் காய்ச்சும் கும்பல் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The matter is *sub judice*.

திரு. செ. மாதவன் : இந்த நிகழ்ச்சியிலே போலீஸ்காரர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டதா ? போலீஸார் செய்கையால் மக்களுக்கு ஏதாவது ஏற்பட்டதா ? இதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸார் தவறு செய்யவில்லை, தவறு செய்தவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது. இதைத் தவிர வேறு தகவல் கொடுக்கத் தயாராய் இல்லை.

Backward class students

* 198 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to exempt